Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ்Mirror

FRIDAY, SEPTEMBER 05 2025

வெள்ளிக்கிழமை 05, செப்டெம்பர் 2025 | ஒளி: 11 கதிர் 044 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## மஹிந்தவின் வீட்டுக்கு ஆப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்போது வசித்து வரும் கொழும்பு விஜேராம வீதியில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தை குற்றப் புலனாய்வுத் துறையிடம் (C.I.D.) ஒப்படைப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகிறது.

சமீபத்தில் உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள் குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டதாக வட்டாரங்கள் தெரிவித்தன.

தொடர்ச்சி P2



## நீர்த்தேக்கங்களில் தடை வலைகள்

நன்னீர் மீன் உற்பத்தி குறைவடைவதைத் தடுப்பதற்கும், நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் 02 ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 250 நீர்த்தேக்கங்களில் தடை வலைகளை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தை இலங்கை தேசிய நீரியல்உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி, நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2



### பகிடி வதை விவகாரம்:

## 7 மாணவிகளுடன் ஒன்பது பேர் கைது

■ கனகராசா சரவணன்

கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தில் பயிலும் மாணவிகள் குழுவை பகிடிவதை வன்கொடுமை செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் 7 மாணவிகள் மற்றும் 9 ஆண் மாணவர்களை குற்றப் புலனாய்வுத் துறை (CID) கைது செய்துள்ளது.

அதே பல்கலைக்கழகத்தில் படிக்கும் 24 முதல் 26 வயதுக்குட்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பயிலும் மாணவிகள் குழுவை சந்தேக நபர்கள் பகிடிவதை வன்கொடுமை செய்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில், நடத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, சந்தேக நபர்கள் புதன்கிழமை (03) கைது செய்யப்பட்டனர்.

இதில் 9 மாணவன்கள், 7 மாணவிகள் உட்பட 16 பேரையும் ஏறாவூர் நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது தலா ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவித்து எதிர்வரும் 26 ம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டார்.



### காணாமல் போனோர் வழக்குகளைத் தீர்ப்பதற்கு

# “2027 இறுதிக்குள் சிறப்புத் திட்டம்”

காணாமல்போன ஆட்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகளை நடாத்துதல் மற்றும் இன்னலுற்றவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் விசாரணை மற்றும் குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்கான விசேட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போன மற்றும் காணக்கிடைக்காமை ஆட்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுடைய உறவுகளுக்கு அறிக்கைகளை வழங்குதல் இவ் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரை குறித்த அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ள 16,966 முறைப்பாடுகளில் விசாரணைகளுக்காக மேலும் 10,517 முறைப்பாடுகள் காணப்படுகின்றன.

அதற்கமைய இன்னலுற்றவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் விசாரணை மற்றும் குறித்த கடமைகளை நிறைவேற்றுவதற்கான விசேட கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், குறித்த பணிகளுக்காகவும் ஓய்வு நிலை நீதிபதிகள், சிரேஷ்ட நிர்வாக அலுவலர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட தகைமையுடன் கூடிய நபர்கள் 75 பேருடன் கூடிய உப பணிக்குழு 25 குழுக்களை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



### புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகள்

## 18 பேர் நியமனம்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் 18 பேரை நியமித்துள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, குறித்த நியமனக் கடிதங்களை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, புதன்கிழமை (03) பிற்பகல் புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு வழங்கினார்.

விசேட தர நீதித்துறை அதிகாரிகள் 17 பேரும் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றும் சிரேஷ்ட அரசதரப்பு சட்டத்தரணி ஒருவரும் இவ்வாறு மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



### பாடசாலைகளில் மாணவர்களை

## உள்வாங்கும் சுற்றறிக்கை இரத்து

இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஆலோசனைச் சுற்றறிக்கைகளை இரத்துச்செய்து, புதிய சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பாடசாலைகளில் 5 மற்றும் 6ஆம் தரங்கள் தவிர்ந்த 2ஆம் தரம் தொடக்கம் 11ஆம் தரம் வரை மாணவர்களை உள்வாங்கல் தொடர்பில் புதிய சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது.

உத்தேசிக்கப்பட்டுள்ள கல்வி மறுசீரமைப்பை அமுல்படுத்துவதற்காக வகுப்பறையொன்றிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அங்கீகரிக்கப்பட்டுள்ள எல்லைக்குள் மாத்திரம் பேண வேண்டியது அவசியமாகும்.

தொடர்ச்சி P2

### 33 அரச நிறுவனங்களுக்கு

## மூடுவிழா

தற்போது தொழிற்பாட்டு நிலையில் இல்லாத 33 அரச தொழில் முயற்சிகளை 02 கட்டங்களாக முறையாகக் குலைத்து முடிவுறுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, குறித்த அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள விசேட குலைத்தல் பிரிவின் மேற்பார்வையின் கீழ் இவை மூடப்படவுள்ளன. ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள அமைச்சரவை பத்திரத்தில்,

பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கல் மற்றும் மூலோபாய ரீதியான பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக, குறித்த காலத்திற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ள ஒருசில அரச தொழில் முயற்சிகள் தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் சமகாலத்துடன் ஏற்புடையதாக இன்மை மற்றும் சந்தைத் தேவைகளுடன் பொருந்தாமை போன்ற காரணங்களால் தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நடைமுறைக்குச் சாத்தியமற்றது, குறைவான நிதிச் செயலாற்றுகை போன்ற காரணங்களால் செயலிழந்து காணப்படுகின்றன.

தொடர்ச்சி P2



### தமிழ்மொழி மூலம்

## யாழ். மாணவன் முதலிடம்

2025ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின்படி, அகில இலங்கை அளவில் காலி மாவட்டம் அம்பலாங்கொடை ஸ்ரீ தேவானந்தா கல்லூரியின் சந்துனி அமயா சிங்கள மொழி மூலம் 198 புள்ளிகளை பெற்று முதலிடம் பெற்றுள்ளார்.

தொடர்ச்சி P2



## புற்றுநோயால் 200 சிறுவர்கள் உயிரிழப்பு

புற்றுநோயால் ஆண்டு தோறும் சுமார் 200க்கும் மேற்பட்ட சிறுவர்கள் உயிரிழப்பதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் சமூக வைத்திய நிபுணர் டொக்டர் சூரஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், முறையான மருத்துவ சிகிச்சையைப் பெறுவதன் மூலம் இந்த நிலைமையைக் குறைக்க முடியும் என்றும் வைத்திய நிபுணர் டொக்டர் சூரஜ் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## சிறுமி மாயம்: வெள்ளை வேன் மீது சந்தேகம்





■ செ.தி.பெருமாள்.

தாய் தந்தையர் தோட்ட பணிக்கு சென்ற வேளை 16 வயது வயதுடைய சிறுமி காணாமல் போயுள்ள சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை பகுதியில் வியாழக்கிழமை (04) காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக காணாமல் போன சிறுமியின் தந்தை பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில், தனது 16 வயதுடைய மகள் சாமிமலை பெயலோன் தோட்ட பாகினி பிரிவில் தனது மாமி வீட்டில் இரவு தங்கியிருந்தார். நானும் தன் மனைவியும் தோட்ட பணிக்கு சென்றிருந்த வேளை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## ‘வியத்புர’ வீட்டுத் திட்டத்தில் எம்.பிக்களுக்கான சலுகை நீக்கம்

பாராளுமன்ற உறுப்பினர்களால் ‘வியத்புர’ வீட்டுத்திட்டத்தில் வீடுகளைக் கொள்வனவு செய்யும் போது வழங்கப்பட்டுள்ள சலுகைகளை நீக்குவதற்காக நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2022.05.09 அன்று நாட்டில் இடம்பெற்ற குழப்பகரமான சூழ்நிலையால் வீடுகளை இழந்த அப்போதிருந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்ட வியத்புர வீட்டுத்தொகுதியில் 101 வீட்டு அலகுகளை ஒருவருட வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு 2022.07.04 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மஹிந்தவின் வீட்டுக்கு ஆப்பு



முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகளை நீக்குவதற்கான புதிய சட்டமூலம் சமீபத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது, மேலும் எதிர்காலத்தில் இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற அரசாங்கம் நம்புகிறது.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன், முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியத்தைத் தவிர, உத்தியோகபூர்வ இல்லங்கள் உட்பட மற்ற அனைத்து வசதிகளும் ரத்து செய்யப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகளின் உரிமைகளை நீக்குவதற்கான புதிய சட்டமூலம் மீதான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் இரண்டொரு நாட்களில் சபாநாயகரிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ தற்போது வசித்து வரும் விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வசித்து வந்தார். அதற்கு முன்பு, பல அமைச்சர்கள் அங்கு வசித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகள்


# 18 பேர் நியமனம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 111 ஆவது அரசியலமைப்பின் (2) ஆவது உப பிரிவின்படி ஜனாதிபதியினால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளின் விபரம்

| புதிய மேல் நீதிமன்ற நீதிபதிகளின் பட்டியல் | முந்தைய பதவிகள் |
|---|---|
| 01. எஸ்.எஸ்.கே. விதான | மாவட்ட நீதிபதி |
| 02. ஏ.எம்.ஐ.எஸ். அத்தநாயக்க | மாவட்ட நீதிபதி |
| 03. ஏ.எம்.எம். ரியால் | மாவட்ட நீதிபதி |
| 04. டீ.பீ. முதுங்கொடுவ, | மாவட்ட நீதிபதி |
| 05. எஸ்.பி.எச்.எம்.எஸ். ஹேரத் | மேலதிக மாவட்ட நீதிபதி |
| 06. ஜே. கஜனிதீபாலன் | மாவட்ட நீதிபதி |
| 07. டி.எம்.டி.சி. பண்டார | நீதிச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் |
| 08. எச்.எம்.பி.ஆர். விஜேரத்ன | மேலதிக மாவட்ட நீதிபதி |
| 09. டி.எம்.ஏ. செனவிரத்ன | மேலதிக மாவட்ட நீதிபதி |
| 10. ஏ.ஏ. ஆனந்தராஜா | நீதவான் |
| 11. ஜி.என். பெரேரா | மாவட்ட நீதிபதி |
| 12ஏ. ஜுடேசன் | மாவட்ட நீதிபதி |
| 13. திருமதி.டபிள்யூ.கே.டி.எஸ். வீரதுங்க | மாவட்ட நீதிபதி |
| 14ஆர்.பி.எம்.டி.ஆர். வெலிகொடபிடிய | மாவட்ட நீதிபதி |
| 15. செல்வி கே.டி.என்.வி. லங்காபுர, | நீதவான் |
| 16. டி.எம்.ஆர்.டி. திசாநாயக்க | மாவட்ட நீதிபதி |
| 17. எம்.ஐ.எம். ரிஸ்வி | மாவட்ட நீதிபதி |
| 18. திருமதி. ஏ. ஜெயலக்ஷி டி சில்வா | சிரேஷ்ட அரசதரப்பு சட்டத்தரணி |

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.



தமிழ்மொழி மூலம்

# யாழ். மாணவன் முதலிடம்

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் ஆனந்தசோதி லக்சயன் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலமாக 194 புள்ளிகளை பெற்று முதலிடம் பெற்றுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் மதிப்பெண்களைப்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 51,969 ஆகும், இது 17.11% சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

இது கடந்த ஆண்டைவிட 1.06% அதிகம் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ்.இந்திகா குமாரி தெரிவித்தார்.



# நீர்த்தேக்கங்களில் தடை வலைகள்

கிராமியப் பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு போசாக்கான உணவு வேளையை வழங்குவதில் நன்னீர் மற்றும்உயிரின வளர்ப்பு பாரிய பங்காற்றுகின்றது.

ஆனாலும், நாட்டில் உள்ளகப் பகுதிகளிலுள்ள நீர்த்தேக்கங்களில் வான்பாயும் போதும், மதகு வழியாக நீர் வெளியேற்றம் செய்யும் போதும் மீன்கள் வெளியே அடித்துச் செல்லப்படுகின்றமையால் நன்னீர் மீன்கள் அதிகளவில் குறைவடைகின்றது.

ஒரு நன்னீர் நீர்த்தேக்கத்திலிருந்து ஓராண்டுக்கு 20,000-40,000 கிலோ கிராம் மீன்கள் மனிதப் பயன்பாட்டுக்கு முன்னரே வெளியேறுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

முதிர்ச்சியான மீன்கள் வெளியே அடித்துச் செல்லப்படல், மீன்கள் குறைவடைவதற்கும், மீன் உயிரினப் பெருக்கத்திற்கும் இயலளவுடைய முதிர்ச்சியான மீன்கள் வெளியேறுகின்றமையால், எதிர்காலத்தில் மீன்கள் வெகுவிரைவாகக் குறைவடையுமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் மாணவர்களை

# உள்வாங்கும் சுற்றறிக்கை இரத்து



அதனால்,நாட்டிலுள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்விக்கான உரிமையை உறுதிப்படுத்தி, பாடசாலைகளில் 5 மற்றும் 6ஆம் தரங்கள் தவிர்ந்த இடைநிலைத் தரங்களுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கு வாய்ப்புக்களை வழங்குவதற்காக சரியான முறையை அறிமுகப்படுத்துவது பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது.

குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, இடைநிலைத் தரங்களில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தற்போது கல்வி கற்கும் பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைக்கு உள்வாங்குவதற்கு உண்மையானக் தேவையாகவுள்ள மாணவர்களுக்கு முன்னுரிமை கிடைக்கும் வகையில் பாடசாலைக்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பை வழங்குவதற்காக, புதிய சுற்றறிக்கை மூலம் ஆலோசனை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் ஆலோசனை செயற்குழுவால் நியமிக்கப்பட்டுள்ள உபசெயற்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளையும் கருத்தில் கொண்டு, பாடசாலைகளில் 5 மற்றும் 6ஆம் தரங்கள் தவிர்ந்த 2ஆம் தரம் தொடக்கம் 11ஆம் தரம் வரை மாணவர்களை உள்வாங்குவதற்கு ஏற்புடைய வகையில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள ஆலோசனைச் சுற்றறிக்கைகளை இரத்துச்செய்து, அதற்குப் பதிலாக புதிய ஆலோசனைச் சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.



# புற்றுநோயால் 200 சிறுவர்கள் உயிரிழப்பு

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

“2022ஆம் ஆண்டில், புற்றுநோயாளிகள் கண்டறியப்பட்டபோது, அவர்களில் 904 பேர் சிறுவர்கள் ஆவர். கடந்த 15 ஆண்டுகளுக்கான தரவுகளைப் பார்க்கும்போது, சிறுவர்கள் புற்றுநோய்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லை என்பது தெளிவாகக் காட்டுகிறது.

சராசரியாக, இது 600,700,800 வரம்பிற்குள் இருந்தது. இப்போது, ஆண்டுக்கு 900 வரை குழந்தை புற்றுநோயாளர்கள் பதிவாகின்றன.

2019இல் சிறுவர்கள் புற்றுநோய் காரணமாக சுமார் 200 வழக்குகள் பதிவாகியுள்ளதாக பதிவாளர் ஜெனரல் துறை தெரிவித்துள்ளது.

ஆனால் 2020இல், சராசரியாக, ஆண்டுக்கு சுமார் 200 சிறுவர்கள் புற்றுநோய் நோயாளிகள் இறக்கின்றனர் என்று இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், குணப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும் தாமதமாகப் பதிவாகும் நோயாளிகள் உள்ளனர்” என்றார்.



# ‘வியத்புர’ வீட்டுத் திட்டத்தில் எம்.பிக்களுக்கான சலுகை நீக்கம்

பின்னர், குறித்த வீடுகளை சலுகை முறையில் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு வழங்குமாறு அப்பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதற்கமைய, 15.5 மில்லியன் குறைந்தபட்ச விலை மற்றும் 22 மில்லியன் உயர்ந்தபட்ச் விலைக்கு சாதாரண மக்களுக்கு விற்பனை செய்கின்ற வீட்டு அலகொன்றை, 13.34 குறைந்தபட்ச விலை மற்றும் 18.21 மில்லியன் அதிகபட்ச விலைக்கும் குறைத்து சலுகை முறையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கும், விற்பனை விலையில் 25சதவீதத்தை ஆரம்பக் கட்டணமாக அறவிட்டு, எஞ்சிய தொகையை 15 வருடங்களில் 10 சதவீத ஆண்டுக்கான வட்டி வீதத்தின் கீழ் அவர்களிடமிருந்து அறவிடுவதற்கும், 2024.07.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த முறைமையின் கீழ் வீட்டு அலகைக் கொள்வனவு செய்வதற்காக 29 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் 2024.12.31 அன்று வரை விற்பனை விலையின் 25 சதவீதத்தை வைப்பிலிட்டுள்ளனர்.

ஆயினும், இச்சலுகை முறையால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 92.126 மில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதுடன், செலவை ஈடுசெய்வதற்கு இயலாமல் போயுள்ளது.

அதனால், மேற்குறிப்பிட்டவாறு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சலுகை முறையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்வதற்கும், குறித்த 29 பாராளுமன்ற உறுப்பினர்களும் உடன்பாடு தெரிவிப்பின் சாதாரண மக்களுக்கு குறித்த வீட்டு அலகைக் கொள்வனவு செய்யும் முறை மற்றும் விலைக்கமைய அவர்களுக்கும் வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

33 அரச நிறுவனங்களுக்கு

# மூடுவிழா

தேசிய பொருளாதாரத்திற்கு அல்லது அரச சேவைகளை வழங்குவதற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குகின்ற நியதிச்சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் போன்ற பல்வேறு வகைகளுக்குரிய அரச தொழில் முயற்சிகள் அரசுக்கு செலவுச் சுமையாகத் தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வதற்குப் பதிலாக, குறித்த நிறுவனத்தைக் குலைத்து முடிவுறுத்துவது பொருத்தமென அடையாளங் காணப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிறுமி மாயம்: வெள்ளை வேன் மீது சந்தேகம்



மகள் பெயர்லோன் தமிழ் வித்தியாலயத்தில் தரம் எட்டு வரை கல்வி பயின்றுள்ளதுடன் அதன் பின்னர் நோய் ஏற்பட்ட காரணத்தால் இடை நடுவில் படிப்பை நிறுத்தியுள்ளார். மகள் இரவு நேரத்தில் தனது மாமியார் வீட்டில் தங்குவதாகவும் வழக்கம் போல் தங்கள் இருவரும் பணி முடித்து வந்து பார்த்த போது மகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வியாழக்கிழமை (04) காலை சந்தேகத்திற்கு இடமான வேன் ஒன்றை அப்பகுதியில் கண்டதாகவும் அதில் இளைஞர்கள் சிலர் இருந்துள்ளனர் என்றும், அந்த வேன் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் கூறியுள்ளார்.

காணாமல்போண சிறுமி தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது 052-227 7222 எண் மூலம் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்கு அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொம்பு முறி


அம்பாறை – தம்பிலுவில் பிரதேசத்தில் பாரம்பரியக் கலைகளுள் ஒன்றான கொம்பு முறி விளையாட்டுக்கான கோவலன் ஆலயத்தில் 8 நாட்கள் இடம்பெறும் விசேட பூஜையின் 5ஆவது பூஜை செவ்வாய்க்கிழமை (02) அன்று மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

– கனகராசா சரவணன்









### “குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்த

# அரச நிதியைப் பயன்படுத்த வேண்டும்”

“அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம், குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர்களின் உரிமைகள் மற்றும் நலனை உறுதிப்படுத்துவதற்கான ஒரு சக்திவாய்ந்த காரணியாகும். ஒரு பொறுப்புள்ள அரசாங்கமாக, குழந்தைகளின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கும் பொது நிதியைப் பயன்படுத்துவதை நாம் உறுதிசெய்ய வேண்டும்,” என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.



கொழும்பில் *NH Collection Hotel*லில் செப்டெம்பர் 3 மற்றும் 4ஆம் திகதிகளில் நடைபெறும் *“Financing What Matters: Strengthening Public Financial Management for Inclusive Social Outcomes for Children and Families”* என்ற தலைப்பிலான பிராந்திய அறிவுப் பரிமாற்றத் திட்டத்தின் தொடக்க விழாவில் உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது உரையாற்றிய பிரதமர், “நமது அனைத்து அரச கொள்கைகளும் குழந்தைகளின் மிக உயர்ந்த தேவைகளைப் பிரதிபலிக்கின்றன. நமது அரசாங்கம் குழந்தைகளை நமது பொறுப்புகளின் மையமாக வைத்திருக்கிறது. எனவே, அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற பிள்ளைகள் உள்ளிட்ட கூடுதலான இடர்களுக்கு முகம் கொடுத்திருக்கும் சிறுவர்களுக்கு ஏற்படும் பொருளாதாரத் தாக்கம் குறித்த விழிப்புணர்வுடன், அரச நிதி மேலாண்மையில் முன்னுரிமை கொடுத்துச் செயல்படுகிறோம்.

இதற்கமைய, 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் குழந்தைகளை மையமாகக் கொண்ட பல நிதி உதவித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஆதரவற்ற குழந்தைகள் அல்லது பாதுகாவலரின் பராமரிப்பில் உள்ள குழந்தைகளுக்கு மாதாமாதம் ரூ.5,000 உதவித்தொகை வழங்குதல். இதற்காக ஒரு பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.2,000 குழந்தையின் வங்கிக் கணக்கிலும், மீதி ரூ. 3,000 குழந்தையின் பராமரிப்பிற்காகவும் வழங்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட 379 சிறுவர் இல்லங்களின் அடிப்படை வசதிகள், கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளத்தை மேம்படுத்துவதற்காக ரூ.500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

18 வயது பூர்த்தியான பிறகு திருமண பந்தத்தில் இணையும் ஆதரவற்ற குழந்தைகளாக இருந்தவர்களுக்கு நீண்டகாலப் பாதுகாப்பு மற்றும் நிலையான வீட்டை அமைத்துக்கொள்வதற்கு நிதி உதவி வழங்குவதற்காக ஒரு பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட வேண்டிய ஆதரவற்ற குழந்தைகளுக்காக உகந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்த 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு- செலவுத் திட்ட ஒதுக்கீடானது சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளுக்காக வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வரலாற்றில் இதுவரை ஒதுக்கப்படாத மிகப்பெரிய ஒதுக்கீடாகும். பாதிப்புகளுக்கு உள்ளாகக்கூடிய குழந்தைகளைப் பாதுகாத்தல், குடும்பங்களைப் பலப்படுத்துதல், மற்றும் இலங்கையின் ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி, ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் மன அமைதி ஆகியவை கிடைப்பதை உறுதிசெய்வதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பைச் சுட்டிக்காட்டிய பிரதமர், “புத்தாக்கங்களை ஏற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுத்து, நிலையான தன்மையைக் குறியாகக் கொண்ட நிதிக் கொள்கைக்கமையச் செயல்படுவதன் மூலம், இன்றைய சவால்களை நாளைய வளர்ச்சி மற்றும் மறுசீரமைப்புக்கான வாய்ப்புகளாக மாற்றி அமைப்பதை நமது அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது,” எனவும் அவர் மேலும் கூறினார்.

## முன்னேஸ்வர ஆலய தேர்த் திருவிழா

வரலாற்று சிறப்பு வாய்ந்த சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகாசமேத ஸ்ரீ முன்னை நாதர் சுவாமி ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை (06) நடைபெறவுள்ளது.



ஆலயத்தின் கொடியேற்ற நிகழ்வு திங்கட்கிழமை (11) அன்று பிரதான குருவும், தர்மகர்த்தாவுமாகிய ஆலய குருக்கள் பிரம்மஸ்ரீ ச.பத்மநாப குருக்கள் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



### செம்மணி இன படுகொலைக்கு

## நீதி கோரி மட்டக்களப்பில் கையெழுத்து போராட்டம்

கனகராசா சரவணன்

வடக்கில் செம்மணி புதைகுழி உட்பட கிழக்கு மண்ணில் உள்ள மனித புதைகுழிகளுக்கும் இடம்பெற்ற இன படு கொலைக்கும் சர்வதேச நீதி கோரிய கையெழுத்து போராட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் வியாழக்கிழமை (04) அன்று நடைபெற்றது.

இந்த கையெழுத்துப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி சிறிநாத், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன், பாக்கியசோதி அரியநேத்திரன், முருகேசு சந்திரகுமார், சுரேஷ் பிரேமச்சந்திரன், மட்டு. மாநகர சபை முன்னாள் முதல்வர் சரவணபவான் உட்பட தமிழ்த் தேசிய கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பிரதேச சபை தவிசாளர்கள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு கையெழுத்து இட்டனர்.

## கேரள கஞ்சா பொதிகள் மீட்பு

எஸ்.ஆர்.லெம்பேட்

முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நறுவிலிக்குளம் கடற்கரை பகுதியில் இருந்து பல கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகள் புதன்கிழமை (3) காலை மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் விசேட பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் முருங்கன் பொலிஸார், கடற்படையினருடன் இணைந்து மன்னார்-நானாட்டான் பிரதான வீதி, நறுவிலிக்குளம் கடற்கரை பகுதியில் புதன்கிழமை (3) காலை விசேட தேடுதல் நடவடிக்கை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது, 25 மூட்டைகளில் பொதி செய்யப்பட்ட 398 சிறிய பொதிகளைக் கொண்ட கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா 906 கிலோ கிராம் எடை கொண்டது எனவும் சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா பொதிகள் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன் அதன் பெறுமதி பல கோடி என தெரிய வருகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## பொலிஸ் ஜீப்பை ஒத்த ஜீப் பறிமுதல்

உயர் பொலிஸ் அதிகாரிகள் பயன்படுத்தும் ஜீப்பைப் போல வடிவமைக்கப்பட்ட ஒரு ஜீப்பை, கண்டி தலைமையக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு சந்தேகத்தின் பேரில் பறிமுதல் செய்துள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட நேரத்தில், ஜீப்பில் இரண்டு பேர் இருந்தனர், பொலிஸ் அதிகாரிகள் பயன்படுத்துவதைப் போன்ற இரண்டு பயண தொலைபேசிகளுடன் அவர்கள் கைது செய்யப்பட்டனர். டொயோட்டா லேண்ட் குரூசர் என்ற அந்த ஜீப், ஒரு அரசியல் கட்சியின் தலைவருக்கு சொந்தமானது என்பது பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்தது. இது அடர் நீல வண்ணம் பூசப்பட்டிருந்தாலும், அதன் பதிவு செய்யப்பட்ட நிறம் பச்சை நிறத்தில் இருப்பதாக மோட்டார் வாகன பதிவு ஆணையகம் தெரிவித்துள்ளது. முன்பக்க ஜன்னலைத் தவிர, இந்த ஜீப்பின் அனைத்து பக்கவாட்டு ஜன்னல்களும் பயணிகளுக்கு வெளியே தெரியாத வகையில் நிறம் பூசப்பட்டுள்ளன. நகரத்தில் ஒரு உயர் பொலிஸ் அதிகாரி ஜீப்பை ஓட்டுகிறார் என்று நினைத்து சில பொலிஸ் அதிகாரிகள் ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பதும் பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.



# ஒரு தொற்றுநோயாக மாறியுள்ள புற்றுநோய்

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெரியவர்கள் மற்றும் குழந்தைகளின் எண்ணிக்கை வேகமாக தற்போது அதிகரித்துள்ளது. இந்த நாட்டில் பெரியவர்கள் அல்லது சிறியவர்கள் என்று பாகுபாடு காட்டாது புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள் என்பது இரகசியமல்ல. இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமைக்கு முக்கிய காரணம் தவறான உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் மது மற்றும் புகையிலை பயன்பாடு ஆகியவற்றால், புற்றுநோய் ஒரு தொற்றுநோயாக மாறியுள்ளது.

இந்த நோயால் பாதிக்கப்பட்டு சரியான மருத்துவ சிகிச்சையை சிலர் ஆரம்ப கட்டத்திலேயே பெற்று இன்றும் வெற்றிகரமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் என்பதும் உண்மையால்,

'புற்றுநோய்' என்பது இந்த நாட்டை மட்டுமல்ல, முழு உலகத்தையும் பாதித்துள்ள ஒரு கொடிய நோய். உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள அரசியல் தலைவர்களும் உலகப் புகழ்பெற்ற நடிகர்களும் நடிகைகளும் புற்றுநோயால் இறந்துள்ளனர் என்பது உண்மைதான்.

அமெரிக்காவில் பிரபல நடிகரும் பாடகருமான ராபர்ட் மிட்சமும் நுரையீரல் புற்றுநோயால் இறந்தார். புகைபிடிப்பதில் எல்லையற்ற ரசிகரான ராபர்ட், ஒரு சிகரெட் விளம்பரத்திலும் தோன்றினார். சிகரெட் விளம்பர நிகழ்ச்சியில் தோன்றிய ராபர்ட், சிகரெட்டால் கொல்லப்பட்டார், இது தர்மத்தின் வேதனையான கர்மாவுக்கு பணம் செலுத்துவது போன்றது.

இந்த நாட்டில் மறைமுகமாக சிகரெட்டை விளம்பரப்படுத்தும் கலைஞர்கள் உள்ளனர். சில இளம் நடிகைகள் சிகரெட் பக்கெட்டுகளை வைத்திருந்து இரவு விடுதிகளில் சிகரெட் புகைப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அவை அந்த நடிகைகள் பணம் செலவழித்து வாங்கிய சிகரெட்டுகள் அல்ல. சிகரெட் இறக்குமதியாளர்களால் வழங்கப்படும் சிகரெட்டுகள். அந்த நடிகைகளுக்கு சிகரெட் இறக்குமதியாளர்களால் சிகரெட் புகைப்பதற்காகத் தனி கொடுப்பனவு வழங்கப்படுகிறது என்பதும் இரகசியமல்ல.

இந்நிலையில், புற்றுநோயால் ஆண்டு தோறும் சுமார் 200க்கும் மேற்பட்ட சிறுவர்கள் உயிரிழப்பதாக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் சமூக வைத்திய நிபுணர் டொக்டர் சூரஜ் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், முறையான மருத்துவ சிகிச்சையைப் பெறுவதன் மூலம் இந்த நிலைமையைக் குறைக்க முடியும் என்றும் வைத்திய நிபுணர் டொக்டர் சூரஜ் குறிப்பிட்டுள்ளார்.

புற்றுநோய்க்குப் பங்களித்த முக்கிய காரணி மோசமான உணவுப் பழக்கம்.

நிறைய ஃப்பிரைடு ரைஸ் மற்றும் இறைச்சி நிறைந்த உணவுகளைச் சாப்பிடுதல். புகைபிடித்தல், நிறைய மது அருந்துதல், உடலுக்கு எந்த உடற்பயிற்சியும் கிடைக்காமை, கொழுப்பு நிறைந்த உணவுகளைச் சாப்பிடுதல், குறைவான தூங்குவார்கள். மன அழுத்தம் மற்றும் உடல் பருமன் ஆகியவை புற்றுநோயின் முக்கிய காரணிகளாகும்.

நீங்கள் வயதாகும்போது அனைத்து நோய்களும் ஏற்படுகின்றன. 40 முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் பொதுவாக, புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள். இது மக்களுக்கு ஏற்படும் புற்றுநோயின் வகையையும் பொறுத்தது. வாய்வழி புற்றுநோய், மார்பக புற்றுநோய், கல்லீரல் புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், மூளை புற்றுநோய், கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய், பல்வேறு வகையான புற்றுநோய்கள் உள்ளன என்பதை நினைவில் கொள்க.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk





தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

வான்மை இன்மை பலருக்கு விளையாட்டு. பொய்யர்களாக வாழ்வதுபற்றிய கவலையே இல்லாமற் இருக்கின்றார்கள். இதன் பிரதிபலன் எதுவும் புரியாமல் வாழ்பவர்களுக்கு எதுவுமே புலப்படாது.

ஒருவர் துன்பப்பட்டால் அல்லது இறந்தால், அதற்காக இரக்கப்படாதவர்கள் இருக்கின்றார்கள். ஏனெனில், தாங்கள் இறந்தவர் இல்லை. துன்பப்படுபவரும் தாங்கள் இல்லை என எண்ணித் திருப்தி அடைந்தபடி பேசாமல் போய்விடுகின்றார்கள்.

தனி ஒரு மனிதனின் சக்தி வீண்விரயமாகிப்போனால், அது ஏதோ வகையில் முழு உலகையும் பாதிக்கும். ஏனெனில் தனிமனிதர்கள் யாவரும் கூடியதே மக்கள் ஆகும். எனவே, எனக்கு என்ன? யார்? எவர் எப்படியானாலும் எமக்கு என்ன என எண்ணும் சுபாவம், பாவங்களைக் கூட்ட ஏதுவாகிவிடும்.

உண்மை ஒரு பொருள் அல்ல. ஆனால், மனித ஆன்மாவை இயக்கும் புனிதமான சக்தி. உலகை இயக்க அனைத்து உயிர்களும் ஒன்றாக இயங்கியே தீரவேண்டும்.

வளர்ச்சி என்பது தேகவளர்ச்சி மட்டுமல்ல நெஞ்சம் வியாபித்து உயர்வதுமாகும். உலகை ரசியுங்கள், யாவருக்கும் தோல் கொடுங்கள்.

பருத்தியூர் பால.வைரவநாதன்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை – 36

## சிறிமாவின் இரண்டாவது வருகை

1965 முதல் 1970 வரையான காலப்பகுதியில் பிரதமர் டட்லி சேனாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பல பொருளாதாரத் தவறுகளை இழைத்தது. ஆனாலும் தமது பொருளாதாரக் கொள்கைகள் குறித்த பெருமிதம் அவர்களிடம் இருந்தது. 1965ஆம் ஆண்டு தோல்வியடைந்ததிலிருந்து நெருக்கமாக இணைந்து பணியாற்றி வந்த எதிர்க்கட்சிகள் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி) 1970 பொதுத் தேர்தலுக்காக, 'ஐக்கிய முன்னணி' என்ற கூட்டணியை உருவாக்கின. இந்த ஐக்கிய முன்னணி ஒரு பொதுவான திட்டத்தையும் ஒரு கூட்டுத் தேர்தல் அறிக்கையையும் உருவாக்கியது. இந்த இரண்டு ஆவணங்களும் 'சோசலிச சமுதாயத்தை' நோக்கி மேலும் முன்னேறுவதற்கான அடித்தளங்களை அமைப்பதற்காக, விரைவான விகிதத்திலும் தேசிய திட்டத்தின் படியும் பொருளாதாரத்தின் வளர்ச்சியை உறுதியளித்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இக்காலப்பகுதியில் அதன் நிலப்பிரபுத்துவ மற்றும் குறிப்பிடத்தக்க குடும்ப விசுவாசிகளுடன், ஒட்டுண்ணித்தனம் மற்றும் சோம்பல் போன்ற புகழ்பெற்ற முதலாளித்துவ குணங்களைக் கொண்ட உயர் நடுத்தர வர்க்கத்தினரையும், அதே போல் தொழில்முனைவு மற்றும் கடின உழைப்பை விட செல்வங்களையும் ஆதரவையும் நம்பியிருக்கும் புதிய பணக்கார முதலாளிகளையும் இணைந்திருந்தனர். 1960களின் நடுப்பகுதியில் இருந்து முற்போக்கான லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி உடனான அவர்களின் தொடர்பு மூலம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தலைவர்கள் தேர்தல் பிரசாரத்தின்போது, தெளிவற்ற முதலாளித்துவ எதிர்ப்பை முன்மொழிந்ததோடு அது சார் சொல்லாட்சியை உருவாக்கினர். என். ஏம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா மற்றும் பீட்டர் கெனமன் போன்ற மூத்த இடதுசாரி அரசியல்வாதிகளுடன், திருமதி பண்டாரநாயக்க தேர்தல் பேரணிகளில் மிகுந்த நம்பிக்கையான தோரணையைப் பெற்றுக்கொண்டார்.

லங்கா சமசமாஜக் கட்சி 1960களின் முற்பகுதியில் அதன் மார்க்சிய புரட்சிகர பிரிவுகளைச் சுத்திகரித்து, ஒரு சமரச மையவாத தலைமையை நோக்கி ஈர்க்கப்பட்டது, இது கம்யூனிஸ்ட் கட்சியைப் போலவே அதன் மார்க்சிய புரட்சிகர முழக்கங்களைக் கைவிட்டு படிப்படியாகப் பௌத்தத்துடன் உறவுகளை ஏற்படுத்தியது. சிலர் பிரித் விழாக்களில் கலந்து கொள்ளவும் தானம் செய்யவும் தொடங்கினர். 'இசை நாற்காலிகள்' என்ற பாராளுமன்ற விளையாட்டை விளையாடுவதில் இந்த முன்னணி கூட்டாளிகளிடையே இந்த பரஸ்பர சரிசெய்தல்கள் மூலோபாய கட்டாயங்களாகக் கருதப்பட்டன. ஆனால், அவை உண்மையில் பாராளுமன்றக் கதிரைகளுக்கான சீரழிந்த இடதுசாரி அரசியலின் இன்னொரு பரிமாணம் என்பதைக் காலம் வெகு விரைவிலேயே உணர்த்தி நின்றது.

டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரம், உணவு உற்பத்தி இயக்கம் நாட்டை கிட்டத்தட்டத் தன்னிறைவு நிலைக்குக் கொண்டு வந்துள்ளது என்ற பெருமையுடன் மிகவும் நம்பிக்கையுடன் தொடங்கியது. மற்றொரு பதவிக்காலம் வழங்கப்பட்டால், வரவிருக்கும் மகாவலி கங்கைப் பிரிப்புத் திட்டத்தைக் கருத்தில் கொண்டு நாடு அரிசியை ஏற்றுமதி செய்யும் என்பது அவரது முக்கிய கூற்றாக இருந்தது. மொழி மற்றும் மதத்தின் உணர்ச்சிப்பூர்வமான பிரச்சினைகள் முந்தைய ஆண்டுகளில் இரண்டு முக்கிய கட்சிகளான - ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ.ல.சு.க. வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொண்டன, மேலும், இந்த விடயத்தில் ஒன்றையொன்று வேறுபடுத்திப் பார்க்க எதுவும் இல்லை. இவ்வாறு, திருமதி பண்டாரநாயக்கவின் அரசாங்கம் 1961இல் கிறிஸ்தவப் பள்ளிகளைக் கையகப்படுத்தியிருந்தாலும், டட்லி சேனநாயக்கவின் அரசாங்கம், அதைத் தாண்டிச் செல்லக்கூடாது என்பதற்காக, பின்னர் புத்த போயா நாட்களை பொது விடுமுறை நாட்களாக அறிவித்தது. இருப்பினும், தேர்தல் பிரச்சாரம் வந்தவுடன், எந்தவொரு நெருங்கிய போட்டியிலும் முக்கியமான சிறுபான்மை கிறிஸ்தவ வாக்காளர்களை ஈர்க்கும் பொருட்டு, திருமதி பண்டாரநாயக்க ஞாயிற்றுக்கிழமையை வாராந்திர விடுமுறையாக அறிவிப்பதாக உறுதியளித்தார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரிசி மானியத்தை இரண்டு படியில் இருந்து ஒரு படியாகக் குறைத்தது.

எதிர்க்கட்சியான ஐக்கிய முன்னணி, அரிசி பிரச்சினையை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி, உச்சபட்சமான பிரச்சாரத்தை மேற்கொண்டது. மேலும், அரசியல் எப்படியாவது அதிகாரத்தைக் கைப்பற்றும் ஒரு விளையாட்டாக மாறிவிட்டதால், வாக்குறுதிகள் சுதந்திரமாக வழங்கப்பட்டன. இரண்டாவது அரிசி மானியத்தின் அளவை மீட்டெடுப்பதாகத் திருமதி பண்டாரநாயக்க உறுதியளித்தார். உலகில் அரிசி பற்றாக்குறை இருப்பதால் இது வெறும் வெற்று வாக்குறுதி என்று டட்லி சேனநாயக்கா பதிலளித்தபோது, சந்திரனிலிருந்து அரிசி கொண்டு வர வேண்டியிருந்தாலும் இரண்டாவது படி அரிசியை வழங்குவேன் என்று அவர் பதிலளித்தார்.

மே 1970 தேர்தல்களின் முடிவுகள் வெற்றியாளர்களையும் தோல்வியடைந்தவர்களையும் ஒருசேர ஆச்சரியப்படுத்தின. ஐ.தே.க. அதிக சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தாலும், அது 17 இடங்களை மட்டுமே வென்றது என்பது தெளிவாகிறது. ஸ்ரீ.ல.சு.க. 36.9% வாக்குகளை மட்டுமே பெற்றாலும் 90 இடங்களை வென்றது. ஐக்கிய முன்னணியில் உள்ள அனைத்து கட்சிகளும் அவர்கள் உருவாக்கிய கூட்டணியால் பயனடைந்தன. உண்மையில், லங்கா சமசமாஜக் கட்சி வென்ற 19 இடங்களே அதன் 35 ஆண்டு வரலாற்றில் அது வென்ற அதிகபட்ச இடங்களாகும். கம்யூனிஸ்ட் கட்சியின் 27 ஆண்டுகால வரலாற்றில் அது வென்ற 6 இடங்களும் இதேபோல முக்கியமானவையே.

கிராமப்புறங்களில் ஐ.தே.கவின் வீழ்ச்சியின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், அது மூன்று கிராமப்புற தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. 'பசுமைப் புரட்சி" சிறு உரிமையாளர்கள், குத்தகைதாரர்கள் மற்றும் குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாய கூலிகள் பெறுபவர்களுக்குப் பயனளிக்கவில்லை என்ற வாதத்தை இது உறுதிசெய்தார். ஐ.தே.க. அரசாங்கத்தின் மூலதன-தீவிர விவசாய உத்தி மற்றும் விலை நிர்ணயக் கொள்கையால் சிறுபான்மையினர் மற்றும் பணக்கார விவசாயிகள் மட்டுமே பயனடைந்தனர். கிராமப்புற வறுமையை நியாயமான முறையில் விரைவாக நீக்கும் வாய்ப்பைக் கொண்ட கிராமப்புற சீர்திருத்தம் மற்றும் மேம்பாட்டு உத்திக்கு அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஏழைகளின் வாங்கும் சக்தி குறைந்துவிட்டாலும், ஐ.தே.க. சிலருக்கு செழிப்பை உருவாக்கி, அதன் மூலம் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே ஏற்கனவே இருந்த இடைவெளியை விரிவுபடுத்தியது. சுருக்கமாக, 1970 தேர்தல் வந்தபோது, நிலைமை பெரும்பாலான மக்களுக்குப் பெருகிய முறையில் தாங்க முடியாததாகிவிட்டது, மேலும் ஆளும் வர்க்கம் பொருளாதார சுரண்டல், வேலையின்மை மற்றும் சமூக சமத்துவமின்மையை முடிவுக்குக் கொண்டுவர டட்லி அரசாங்கத்தால் இயலவில்லை.

இந்தத் தேர்தல் அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகர்களுக்கு ஒரு திகைப்பூட்டும் அதிர்ச்சியாக இருந்தது. 1966 மற்றும் 1969க்கு இடையில் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 5% என்ற உண்மையால் இவர்கள் தங்களை ஆறுதல் படுத்திக் கொண்டனர், மேலும் இது ஐ.தே.கவை மீண்டும் ஆட்சிக்கு வருவதை உறுதி செய்யும் என்று கருதினர். ஆனால் மக்களின் தீர்ப்பு, "ஒரு சிலரின் செழிப்பின் அடிப்படையில் நிறுவப்பட்ட பொருளாதார வளர்ச்சி விகிதங்களைப் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்" என்ற கட்டுக்கதையைத் தகர்த்தெறிந்தது. இங்கே எழுகின்ற கேள்வி யாதெனில், வாக்காளர்களின் தீர்ப்பு ஐ.தே.கவின் கொள்கைகளை நிராகரிப்பதை விட ஒரு சிலருக்குப் பயனளித்ததா? ஐக்கிய முன்னணியால் முன்னெடுக்கப்பட்ட பரந்த அடிப்படையிலான சோசலிச திட்டத்திற்கு இது ஒரு நேர்மறையான வாக்களிப்பாகவும் இருந்ததா? மொத்தத்தில், 1970 மே மாதத்தில் நாடு ஒரு சோசலிச விருப்பத்தைத் தேர்ந்தெடுத்தது என்று ஒருவர் வாதிடலாம். அந்த விருப்பம், அந்தக் காலத்தின் சூழலில், தாங்கமுடியாத பொருளாதார நிலைமைகளிலிருந்து மீட்பை எதிர்பார்ப்பதைக் குறிக்கிறது.

1970 மே மாதத்தில் இலங்கையர் செய்த அரசியல் தேர்வில் வெளிப்படுத்தப்பட்ட பெரும்பான்மையான மக்களின் பிம்பம் ஒரு 'சோசலிச' பிம்பமாகும். ஒரு சோசலிச சமூகம் என்பது அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தின் உறுதியான குறிக்கோள் மீது மக்கள் நம்பிக்கை கொண்டனர். இது நமது சமூகத்தில் வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் வறுமையை ஒழிப்பதற்கும் நனவாகவும் திறம்படவும் இயக்கப்பட்ட சமூகக் கொள்கைகளைக் குறிக்கும். இந்த எதிர்பார்ப்பு மக்களிடம் இருந்தது.

இந்த சோசலிச சொல்லாட்சியை சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கையாக மொழிபெயர்க்கத் தவறியமையானது ஏப்ரல் 1971 இல், ஜனதா விமுக்தி பெரமுனாவின் (மக்கள் விடுதலை முன்னணி) ஆயுதக் கிளர்ச்சிக்கு வழிவகுத்தது. ஜே.வி.பி. 1960களின் பிற்பகுதியிலிருந்து ஒரு ரகசிய அரசியல் இயக்கமாக இருந்தது. இது முக்கியமாக ஓரளவு கல்வி கற்ற கீழ் சாதி குழுக்களைச் சேர்ந்த கிராமப்புற சிங்கள பௌத்த இளைஞர்களைக் கொண்டிருந்தது. பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளின் போலி-சோசலிச அரசியலையும், ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ.ல.சு.கவின் குடும்ப அரசியலையும் இந்த இயக்கம் விமர்சித்தது. ஜே.வி.பி. முதலில் 1970 தேர்தல்களில் ஸ்ரீ.ல.சு.க.-லங்கா சமசமாஜக் கட்சி-கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணியை ஆதரித்து பிரசாரம் செய்வதன் மூலம் சமூக-பொருளாதார நெருக்கடிக்கு ஒரு ஜனநாயக அரசியல் தீர்வைத் தேடியது. ஆனால் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஒரு சோசலிச செயல்திட்டத்திற்கு உறுதியளிக்கவில்லை என்பதை அது விரைவாக உணர்ந்தது, எனவே அது அரச அதிகாரத்தைக் கட்டுப்படுத்த ஒரு கிளர்ச்சி முயற்சிக்காக ரகசியமாகத் தன்னை ஒழுங்கமைத்துக் கொண்டது. ஜே.வி.பி. தலைமை சீன மற்றும் கியூப புரட்சிகளிலிருந்து உத்வேகம் பெற்றது. இந்த இயக்கம் கீழ் நாட்டுச் சிங்கள இளைஞர்களிடையே மிகவும் பரவலாக இருந்தபோதிலும், அதன் பலமாகவும், வெற்றியை நெருங்கி வந்ததாகவும் இருந்த அதன் இரகசிய தன்மை, ஒரு வெகுஜன இயக்கமாக வளரத் தவறியமை அதன் முக்கிய பலவீனமாகவும் அமைந்தது. ஜே.வி.பி எழுச்சி புதிய அரசாங்கத்தால் இரக்கமின்றி நசுக்கப்பட்டது மற்றும் சுமார் 5,000 இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

## கடிதங்கள்

### காட்டு யானைகளால் பெருந்தொல்லை

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மற்றும் அதனை அண்டிய பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(17) அதிகாலை காட்டு யானைகள் சில உட்புகுந்து பல்வேறு சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

அதிகாலை 4 மணியளவில் பாடசாலையினுள் உட்புகுந்த இக்காட்டு யானைகள் பாடசாலையின் சுற்று மதிலின் சில பகுதிகளையும், பயன்தரும் மரங்களையும் உடைத்து சேதமாக்கியுள்ளதுடன், பாடசாலையினை அண்டிய பகுதிகளில் இருந்த சில மக்கள் குடியிருப்பு உடைமைகளுக்கும் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை, பாடசாலையினை அண்டிய மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்த இக்காட்டு யானைகள் வீடுகள், சுற்றுமதில்கள், கால்நடை பராமரிப்புக் கொட்டில்கள், கால்நடை உணவுப் பொருட்கள், பயன்தரும் மரங்கள் மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகள் போன்றவற்றுக்கும் பலத்த சேதத்தினை ஏற்படுத்தியுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

- எம்.ஏறமீஸ்



# இலங்கையில் இளம் வயதில் கர்ப்பம்



சந்திரகுமார் காஞ்சனா,
3ஆம் ஆண்டு,
யாழ்.பல்கலைக்கழகம்.



இளம் வயதில் கர்ப்பம் என்பது இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஒரு சமூக சிக்கலாகும். இது மாணவிகளின் கல்வி, வாழ்க்கைத் தரம், சுயநலம் மற்றும் எதிர்காலத்தைக் குலைக்கும் முக்கியமான பிரச்சனை. இளவயதில் கர்ப்பம் என்பது பொதுவாக 15 முதல் 19 வயதுக்குள் உள்ள சிறுமிகள் கர்ப்பமாகும் நிலையாக வரையறுக்கப்படுகிறது.

இந்நிலையில், உள்ள சிறுமிகள் உடல், மனநலம் மற்றும் சமூக ஆற்றலால் இன்னும் முழுமையாக உருவாகாதவர்கள் என்பதால், கர்ப்பம் அவர்களுக்கு சீரழியும் ஒரு வாழ்க்கை அனுபவமாக அமைகிறது. இலங்கையில் பல மாவட்டங்களில் இளம் வயதில் கர்ப்பம் அதிகரித்திருப்பதற்கான காரணங்களில் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புகள், கல்வி பற்றாக்குறை, பழங்காலக் கற்பனை வாத கருத்துகள், மற்றும் ஊடக தாக்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாக, பாடசாலை செல்லும் மாணவிகளே இவ்விதமான செயற்பாடுகளில் அதிகமாக ஈடுபடுகின்றனர். இன்றைய இளைய தலைமுறையின் எதிர்காலம் மற்றும் நாட்டின் வளர்ச்சி இவ்வாறான பிரச்சனைகளை எவ்வாறு கையாளுகிறோம் என்பதற்கே சார்ந்திருக்கிறது.

## இளம் வயது கர்ப்பம் வீதம்

2009இல், பதிவு செய்யப்பட்ட கர்ப்பங்களின் 6.5% இளம் வயது கர்ப்பமாகக் காணப்பட்டது. இது 2023 இன்று 3.8% ஆக குறைந்துள்ளது .இருப்பினும் சமீபத்தில் இலங்கையில் இளம் வயதினருக்கு இடையிலான கர்ப்பங்கள் விகிதத்தில் குறைவாகக் காணப்பட்டாலும், குறிப்பிட்ட மாவட்டங்களில் இதன் விகிதம் இன்னும் அதிகமாகத் திகழ்கிறது. வீதத்தில் ஏற்பட்ட 55.5% உயர்வு குறிப்பாக பாலியல் வன்கொடுமைகள் மற்றும் துஷ்பிரயோகம் ஆகியவற்றின் (rape, sexual abuse) காரணமாக இருக்கலாம்.

இளம் வயது கர்ப்பம் வீதத்தில் Trincomalee (9%), Batticaloa (8.4%) மாதிரியாக மாவட்டங்கள் உயர்ந்துள்ளது. Mannar (2.6%), Ampara (2.3%), Kandy (2.7%) போன்ற மாவட்டங்களில் குறைவாக உள்ளது.

National Child Protection Authority (NCPA) தரவுகளின் படி, 2024ஆம் ஆண்டு முதல் பாதியில் 28 இளம் வயது கர்ப்பங்கள் (teenage pregnancies) முறையில் பதிவு செய்யப்பட்டன, இதுவே 2023இல் உள்ள 18 வழக்குகளைவிட 55.5% அதிகரித்துள்ளது .

கல்வி மற்றும் பரப்பலான பாலியல் மற்றும் Reproductive Health கல்வி (SRH/CSE) மேம்படுத்தல் அவசியம் .

இப் பிரச்சினைக்கான முக்கியமான காரணங்கள் (Major Causes)

### 1. கல்வி பற்றாக்குறை

இளம்பெண்கள் பாலியல் கல்வியில் பற்றாக்குறை கொண்டிருப்பது முக்கியமான காரணமாகும். பள்ளிகளில் 'comprehensive sex education' என்பது முழுமையாக வழங்கப்படுவதில்லை. மாணவிகள் பாதுகாப்பான உடலுறவு, கருக்கலைப்பு, மற்றும் மனநிலை மாற்றங்களைப் பற்றிய அறிவின்மை காரணமாக தவறான முடிவுகளை எடுக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது.

### 2. வறுமை மற்றும் சமூக பொருளாதார நிலை

பல்வேறு குடும்பங்களில் வறுமை காரணமாக, பெற்றோர் தங்கள் மகள்களை குறைந்த வயதிலேயே திருமணம் செய்து வைக்கின்றனர். சில நேரங்களில் இது ஒரு 'சமூக பாதுகாப்பு' என எண்ணப்படுகின்றது. இது அந்த பெண்ணின் கல்வி, வாழ்க்கைத் தரம் மற்றும் சுயநலம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும். மேலும், தற்காலத்தில் பெற்றோர்கள் வறுமை காரணமாக வெளிநாடுகளில் பணிபுரிவதால் பிள்ளைகளுக்கான பாதுகாப்பு இல்லாமையும் முக்கியகாரணமாக அமைகிறது.

### 3. ஊடகங்கள் மற்றும் இணையதளத்தின் தவறான தாக்கம்

இணையதளங்களிலும், சமூக ஊடகங்களிலும் பாலியல் தகவல்கள் கட்டுப்பாடின்றி கிடைக்கின்றன. இவை இளம்பெண்கள் மற்றும் இளைஞ்ர்களிடம் தவறான புரிதலை உருவாக்கி, பாதுகாப்பற்ற நடத்தை கொண்டுவருகின்றன.

### 4. பெற்றோர் மற்றும் சமுதாய கண்காணிப்பு பற்றாக்குறை

இன்றைய பெற்றோர் வேலைப்பளு காரணமாக, குழந்தைகளின் நடத்தை மற்றும் சமூக உறவுகளில் குறைந்த அளவில் கண்காணிப்பு செலுத்துகிறார்கள். இதனால் இளம் பெண்கள் தவறான உறவுகளில் ஈடுபட வாய்ப்பு உள்ளது.

### 5. ஆண்களை கட்டுப்பாடின்றி வளர்த்தல்

ஆதிகாலம் முதல் தற்காலம் வரை பெண்பிள்ளைகளை விரும்பாது ஆண் பிள்ளைகளுக்கு அதிக முக்கியம் அளிக்கின்றனர் பெரியவர்கள் பெண்பிள்ளைகளுக்கே கட்டுப்பாடு விதித்து ஆண்பிள்ளைகளை சுதந்திரமாக வளர்க்கின்றனர்.

### 6. பெற்றோர்களின் செயல்கள்

குடும்பத்தில் பெற்றோர்கள் கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் தொடர்புகளை பிள்ளைகள் இருக்கும் வேளையில் நிகழ்த்தும் போது பிள்ளைகளுக்கு அதன் மீதான ஆர்வம் அதிகரிக்கும். இவ்வாறான காரணங்கள் அதிகளவான விளைவுகள் ஏற்படுத்துகின்றன. அவையாவன,

### 7. உடல்நல பாதிப்புகள்

இளவயதில் கர்ப்பம் சிசுவின் மற்றும் தாயின் உயிருக்கு ஆபத்தானதாக இருக்கக்கூடும். அதிகபட்சமாகப் பிரசவ சிக்கல்கள், இரத்தபோக்கு, உடல் சோர்வு, குறை போசனை ,மந்தம் நோய்கள் மற்றும் மரணம் ஆகியவை ஏற்பட வாய்ப்பு உள்ளது.

### 8. மனநல பாதிப்பு

இளம் வயதில் கர்ப்பமானவர்கள் மனஅழுத்தம், மனச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள் போன்றவற்றால் பாதிக்கப்படுவர். சமூகத்தின் ஒதுக்கப்பட்ட மனநிலையும் அவர்களின் மனநலத்தை தீவிரமாக பாதிக்கும்.

### 9. கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகள் குறைதல்

கர்ப்பமான பிறகு, பெரும்பாலான மாணவிகள் பள்ளியை விட்டு விலக வேண்டிய சூழ்நிலையை எதிர்கொள்கிறார்கள். கல்வி நிறைவடையாததால், அவர்கள் தொழில்நுட்பத்திற்கும் திறனுக்கும் அடிபடை இழக்கிறார்கள். இது வாழ்வின் முழு பாதையை பாதிக்கும்.

### 10. சமூக ஒதுக்குதல் மற்றும் குடும்ப அழுத்தம்

கர்ப்பமான இளம்பெண்கள் பெரும்பாலும் குடும்பத்தால் அல்லது சமூகத்தால் ஒதுக்கப்படுகிறார்கள். அதனால் அவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். சில நேரங்களில், திருமணத்திற்கு அழுத்தம், அல்லது குடும்பத்தின் பெயருக்கேற்ப முடிவெடுக்கும் நிலை ஏற்படுகிறது.

## இப் பிரச்சினைக்கான தீர்வுகள் (Solutions)

### 1. பாலியல் கல்வியின் மேம்பாடு

பள்ளிப் பாடத்திட்டங்களில் சீரான மற்றும் வயதுக்கேற்ற பாலியல் கல்வி உள்ளடக்கப்பட வேண்டும். மாணவிகள் மற்றும் மாணவர்கள் பாதுகாப்பான உடலுறவு, ஒத்துழைப்பின் முக்கியத்துவம் மற்றும் உடல்மாற்றங்கள் பற்றிய முழுமையான அறிவை பெறவேண்டும்.

### 2. பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பங்கு

பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் இளைய தலைமுறையின் நடத்தையில் நேர்மையான வழிகாட்டியாக இருக்க வேண்டும். திறந்த உரையாடல்கள் மற்றும் நம்பிக்கைக்குரிய உறவுகள் இளைஞர்களை தவறான பாதையில் செல்லாமல் தடுக்க உதவும்.

### 3. சமூக விழிப்புணர்வு

மாவட்ட அளவிலான களப்பணிகள், ஊடகங்களின் பங்களிப்பு, மற்றும் சமூக அமைப்புகளின் ஒருங்கிணைப்பு மூலம் இளவயது கர்ப்பம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

### 4. சுகாதார சேவைகளின் கிடைப்புத் தன்மை

இளம்பெண்களுக்கு நம்பிக்கைக்குரிய மற்றும் தனிமையான முறையில் சுகாதார ஆலோசனை, கருப்பை தடுக்கும் சாதனங்கள் எளிதில் கிடைக்க வேண்டும்.

### 5. சட்டத் திட்டங்களின் உறுதி

18 வயதுக்கு கீழ் உள்ளவர்களின் திருமணத்தை தடை செய்யும் சட்டங்கள் உறுதியாக அமுல்படுத்தப்பட வேண்டும். மீறுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இளவயதில் கர்ப்பம் என்பது தனிநபரின் சிக்கலாக இல்லாமல், நாடு முழுவதும் சமூகத்தை பாதிக்கும் பெரும் பிரச்சனையாகும். இது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் மற்றும் சமூக ஒற்றுமையை பாதிக்கக்கூடியது. இச்சிக்கலை தீர்க்க, பன்முக திட்டங்கள், கல்வி, சமூக பங்களிப்பு மற்றும் அரசின் உறுதியான நடவடிக்கைகள் தேவைப்படுகிறது. எதிர்கால தலைமுறையினருக்கு பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்படும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

---

Kotler's Essential of Modern Marketing இல்

# Prime Group உள்ளடக்கம்

Prime Group, உலகப் புகழ்பெற்ற சந்தைப்படுத்தலின் தந்தை என அறியப்படும் Prof. Philip Kotler □□□ 'Essentials of Modern Marketing (EOMM)' இலங்கை பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனூடாக, இந்தப் பதிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரே ரியல் எஸ்டேட் வர்த்தக நாமம் எனும் அந்தஸ்தையும் பெற்றுள்ளது.

இந்த கௌரவிப்பு, Prime Group இன் சந்தைப்படுத்தல் மூலோபாயங்களை சர்வதேச நேர்வுபற்றிய ஆய்வு நிலைக்கு உயர்த்தியுள்ளதுடன், ரியல் எஸ்டேட் சந்தைப்படுத்தல் சிறப்பிற்பாக சர்வதேச அடையாளமாக நிறுவனத்தை நிலை நிறுத்தியுள்ளது. இந்த உள்ளடக்கம் Prime Group ஐ நாட்டின் பொருளாதார மற்றும் ஆக்கப்பூர்வமான எதிர்காலத்தை வடிவமைப்பதில் பங்காற்றும் முக்கிய வர்த்தக நாமங்களின் வரிசையில் திகழச் செய்துள்ளது.

தொழிற்துறை முன்னோடி எனும் நிலையை மூன்று தசாப்த காலமாக Prime Group கொண்டாடும் நிலையில், இந்த கௌரவிப்பு கிடைத்துள்ளதுடன், தொழிற்துறை நியமங்களை பின்பற்றுவதற்கு பதிலாக, தொடர்ச்சியான முன்னேற்றகரமான சந்தைப்படுத்தல் வழிமுறைகளை கட்டியெழுப்பியிருந்தமையை குறிக்கும் வகையில் அமைந்துள்ளது. வர்த்தக நாம நிலைப்படுத்தல் மற்றும் புத்தாக்கமான சந்தை தலைமைத்துவம் போன்றவற்றில் மூலோபாயத் தொடர்ச்சித் தன்மை போன்றன, Prime Group ஐ அதன் 30 வருட கால பயணத்தில் வழிநடத்தியுள்ளன. வர்த்தக நாமம் கட்டியெழுப்பியுள்ள நம்பிக்கை மற்றும் தங்கியிருக்கும் திறன் ஆகியவற்றையும் இந்த உள்ளடக்கம் வெளிப்படுத்தியுள்ளது. விசேட இலங்கை பதிப்பினூடாக, Prime Group இன் கதை முழு உலகுக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

Prime Group இன் இணைத் தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "போராசிரியர் Philip Kotler இனால் இந்த முக்கியத்துவம் வாய்ந்த பதிப்பில் கௌரவிக்கப்பட்டுள்ளமை விசேட உயர் கௌரவமாக அமைந்துள்ளதுடன், எமது வர்த்தக நாமத்தின் வலிமையை உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது. Prime Group இல், நாம் போக்குகளை ஒருபோதும் பின்பற்றுவதில்லை, மாறாக அவற்றை உருவாக்குகிறோம். மூன்று தசாப்தங்களாக, Prime இனால் புத்தாக்கமான சந்தைப்படுத்தல் உத்திகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில், அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட Prime Premier, புதிய சொத்து ஹொட்லைன் மற்றும் புரட்சிகரமான கொடுப்பனவுத் தீர்வுகள் போன்ற திட்டங்கள் அடங்கியுள்ளன. இவற்றினூடாக இலங்கையர்கள் எவ்வாறு ரியல் எஸ்டேட்டை அணுகுகின்றனர் மற்றும் அனுபவிக்கின்றனர் என்பது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இன்று, நாம் இல்லங்களை நிர்மாணிப்பதற்கு மேலதிகமாக, சமூகங்களை உருவாக்குவதிலும், அனுபவங்களை ஏற்படுத்தல் மற்றும் நிலைத்திருக்கும் மரபுகளை கட்டியெழுப்புவதிலும் பங்களிப்புகளை வழங்குகிறோம். உலகின் முன்னணி சந்தைப்படுத்தல் அதிகார அமைப்பினால் கௌரவிப்பைப் பெற்றுள்ளமையானது, சந்தைப்படுத்தல் சிறப்பில் எமது ஒப்பற்ற அர்ப்பணிப்பையும் புத்தாக்கத்தில் எமது நிபுணத்துவத்தையும் உறுதி செய்துள்ளது" என்றார்.

Kotler இன் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் பிரசுரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை என்பது, ஒரு வர்த்தக நாமம் எய்தக்கூடிய உயர் கௌரவங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. புத்தாக்கம், வாடிக்கையாளர் மையப்படுத்திய தன்மை மற்றும் வர்த்தக நாம தலைமைத்துவம் ஆகியவற்றில் Prime Group இன் அர்ப்பணிப்பை இந்த கௌரவிப்பு உறுதி செய்துவதுடன், இலங்கையர்கள் எவ்வாறு வாழ்வது மற்றும் முதலீடு செய்வது ஆகியவற்றை வெளிப்படுத்தி, திருப்திகரமான வாடிக்கையாளர்களினூடாக பல தசாப்த கால நம்பிக்கையை எவ்வாறு சம்பாதித்துள்ளது என்பதை உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது.




(இடமிருந்து) Kotler's Essentials of Modern Marketing இலங்கை பதிப்பு அறிமுக நிகழ்வில், Prime Group இன் இணை ஸ்தாபகரும், இணை-தலைமை அதிகாரியுமான சந்தமினி பெரேரா, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர். பேராசிரியர். நளின் அபேசேகர, கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ, Deyo Brand Consultancy ஸ்தாபகர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் Kotler Impact இலங்கை மற்றும் மாலைதீவுகள் தேசிய பிரதிநிதி டென்சில் பெரேரா மற்றும் Prime Group இன் இணை ஸ்தாபகரும், இணை தவிசாளருமான பிரேமலால் பிராஹ்மனகே ஆகியோர் காணப்படுகின்றனர்.

---

CEAT அடுத்த கட்டமாக

# CAMSO வர்த்தக நாம வியாபாரப் பிரிவை கையகப்படுத்தல்

CEAT லிமிடெட், Off-Highway Tyres (OHT) பிரிவில் மூலோபாய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைப் பதிவு செய்யும் வகையில், Michelin Group இன் CAMSO Construction Compact Line வியாபாரத்தைக் கையகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இதில், இலங்கையின் மிதிகம பகுதியைச் சேர்ந்த ஆலை மற்றும் கொட்டுகொடவில் அமைந்துள்ள Casting Product ஆலை போன்றனவும் அடங்கியுள்ளன. இந்த பரிவர்த்தனையினூடாக, CAMSO வர்த்தக நாமத்தின் சர்வதேச உரிமையாண்மையை CEAT க்கு வழங்கியுள்ளது. மூன்று வருட கால அங்கீகாரமளிப்பு காலப்பகுதியைத் தொடர்ந்து, இந்த நிலை நிரந்தரமாக ஒதுக்கப்படும்.

CAMSO வர்த்தக நாமத்தை CEAT கையகப்படுத்தியுள்ளமை, அதிக இலாபமீட்டும் OHT பிரிவில் ஒரு முன்னணி உலகளாவிய செயற்பாட்டாளராக மாறுவதற்கான அதன் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது. கடந்த தசாப்தத்தில், CEAT ஒரு வலுவான விவசாய பிரிவை உருவாக்கியுள்ளது. மேலும் CAMSOவின் சிறிய கட்டுமான உபகரண டிராக்குகள் மற்றும் டயர்களின் நிபுணத்துவத்துடன், 40 க்கும் மேற்பட்ட உலகளாவிய OEMகள் மற்றும் பிரீமியம் சர்வதேச OHT விநியோகஸ்தர்களுக்கு வாய்ப்புகளை வழங்குகிறது. இதைத் தொடர்ந்து Compact line bias tyres டயர்கள் மற்றும் கட்டுமான டிராக்குகள் தொடர்பான நடவடிக்கைகளில் இருந்து Michelin முற்றிலும் வெளியேறும்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் CEAT Limited மேற்கொள்ளத் தீர்மானித்த முதலீட்டுக்காக எனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அண்மைக் காலங்களில் இலங்கையின் நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் பெருமளவு பங்கை இந்தியா கொண்டுள்ள நிலையில், இந்த நிலை தொடர்வதை காண்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இரு நாடுகளுக்குமிடையிலான முதலீட்டு ரீதியான பங்காண்மை விரிவாக்கப்படும் நிலையில், இரு நாடுகளின் தலைமைத்துவத்தினால் முறையாக வழிநடத்தப்படுகின்றன. எமது மக்களுக்காக பகிரப்பட்ட சுபீட்சத்தை உருவாக்கும் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதில் ஆதரவளிக்கின்றன. இலங்கையில் இந்தியாவின் தனியார் துறை முதலீடுகளை மேற்கொள்ளும் நிலையில், இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார மற்றும் வணிக உறவுகள் மேலும் வலிமை பெறும் என்பதில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன்." என்றார்.

CEAT Limited இன் முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் தலைமை நிர்வாகி அர்னாப் பெனர்ஜி கருத்துத் தெரிவிக்கையில், "CEAT இன் நீண்ட கால நோக்கான, Off-Highway mobility இல் முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாட்டாளராக திகழ்வதில், ஒரு படியை முன்னேற்றுவதற்கு CAMSO வர்த்தக நாமத்தை கையகப்படுத்தியுள்ளமை மற்றும் சிறிய கட்டுமான சாதனங்கள் வியாபாரத்தை ஒன்றிணைத்துள்ளமை என்பது முக்கியத்துவம் பெறுகிறது. தயாரிப்புகள், ஆற்றல்கள் மற்றும் சந்தைகளில் எமது மேம்படுத்தப்பட்ட வலிமைகளினூடாக, புதிய பகுதிகளில் பிரவேசிக்க உதவியாக அமைந்திருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அத்துடன், எமது தயாரிப்புகளை விரிவாக்கம் செய்யவும், நிலைபேறான வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவியாக அமைந்திருக்கும்" என்றார்.

CEAT Specialty இன் தலைமை நிர்வாகி அமித் டொலானி கருத்துத் தெரிவிக்கையில், "CAMSO இன் முன்னணி வர்த்தக நாமம் மற்றும் கட்டுமான சாதனங்கள் வியாபாரம் CEAT உடன் ஒன்றிணைத்துள்ளமை என்பது, எமது நிலைமாற்றப் பயணத்தில் முக்கிய அங்கத்தைப் பிடித்துள்ளது. சுமூகமான மாற்றம் தொடர்பில் நாம் உடனடியாக கவனம் செலுத்துவதுடன், வாடிக்கையாளர் திருப்திகரத் தன்மையை உறுதி செய்து, இலங்கையில் எமது செயற்பாடுகளை வலிமைப்படுத்தவதில் கவனம் செலுத்துவோம்" என்றார்.

CAMSO இன் சிறிய கட்டுமான சாதனங்கள் வியாபாரம் தற்போது பிரிவின் அங்கமாக அமைந்திருக்கும் நிலையில், Off-Highway டயர்கள் மற்றும் ட்ராக்கள் பிரிவில் உலகின் அதிகம் நம்பிக்கையை வென்ற வர்த்தக நாமம் எனும் நிலையை நோக்கி CEATபயணிக்கிறது.



முதலாவது போட்டியில்

# சிம்பாப்வேயை வென்ற இலங்கை



சிம்பாப்வேக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஹராரேயில் புதன்கிழமை(03) அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் இலங்கை வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

சிம்பாப்வே: 175/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: பிரயன் பென்னிட் 81 (57), சிகண்டர் ராசா 28 (22), றயான் பேர்ள் 17 (15), ஷோன் வில்லியம்ஸ் 14 (11), தஷிங்கா முசெகிவா 11 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: துஷ்மந்த சமீர 3/30 [4], துஷான் ஹேமந்த 1/28 [4], தசுன் ஷானக 0/14 [2], கமிந்து மெண்டிஸ் 0/15 [2])

இலங்கை: 177/6 (19.1 ஓவ.) (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க 55 (32), கமிந்து மெண்டிஸ் ஆ.இ 41 (16), குசல் மெண்டிஸ் 38 (35) ஓட்டங்கள். பந்துவீச்சு: றிச்சர்ட் நகரவா 2/19 [4], சிகண்டர் ராசா 1/26 [4], ஷோன் வில்லியம்ஸ் 0/7 [1])

போட்டியின் நாயகன்: கமிந்து மெண்டிஸ்.

## பதுளை சரஸ்வதியில் கிரிக்கெட்,காஸ்பந்தாட்ட போட்டிகள்


பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில், கல்லூரி பழைய மாணவர் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் மற்றும் கால்பந்தாட்ட போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பதுளையில் நடைபெறவுள்ளன.

5, 6ஆம் திகதிகளில் பதுளை வின்சென்ட் டயஸ் விளையாட்டரங்கில் கிரிக்கெட் போட்டிகளும், உள்ளக விளையாட்டரங்கில் கால்பந்தாட்ட போட்டிகள் 7ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்ந்து 3 ஆவது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இப்போட்டிகள் மூலம் பெறப்படும் நிதியை கல்லூரியின் கற்றல்-கற்பித்தல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் அபிவிருத்திக்காக பயன்படுத்தவுள்ளதாக பழைய மாணவர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

சம்பியன்ஸ் லீக் குழாம்களில்

## சியெஸ்கா, ஸ்டேர்லிங்க் இல்லை



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடருக்கான 25 பேர் கொண்ட குழாம்களில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான பெடெரிக்கோ சியெஸ்கா, செல்சியின் முன்களவீரரான ரஹீம் ஸ்டேர்லிங்க் உள்ளிட்டோர் இடம்பெறவில்லை.

இதேவேளை, இன்னொரு பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்களவீரரான மத்தியிஸ் டெல்லும் சம்பியன்ஸ் லீக்கின் 25 பேர் கொண்ட குழாமில் இடம்பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

சகலதுறை வீரர்களுக்கான தரவரிசையில்

## முதலாமிடத்துக்கு முன்னேறிய ராசா



சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் முதலாமிடத்துக்கு சிம்பாப்வேயின் சிகண்டர் ராசா முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கெதிரான இரண்டு போட்டிகளிலும் 151 ஓட்டங்களைப் பெற்றதோடு, ஒரு விக்கெட்டைக் கைப்பற்றிய நிலையிலேயே மூன்றாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி முதலாமிடத்தை ராசா அடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை,
1.சிகண்டர் ராசா,
2.அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய்,
3.மொஹமட் நபி,
4.மெஹிடி ஹஸன் மிராஸ்,
5.மிஷெல் பிறேஸ்வெல்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை,
1.கேஷவ் மஹராஜ்,
2.மகேஷ் தீக்‌ஷன,
3.குல்தீப் யாதவ்,
4.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ்,
5. ரஷீட் கான்,
6.மிற்செல் சான்ட்னெர்,
7.மற் ஹென்றி,
8.இரவீந்திர ஜடேஜா,
9.வனிது ஹசரங்க,
10.குடகேஷ் மோட்டி.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை,
1.ஷுப்மன் கில்,
2.றோஹித் ஷர்மா,
3.பாபர் அஸாம், 4.விராட் கோலி,
5.டரைல் மிற்செல்,
6.சரித் அசலங்க, 7.ஹறி டெக்டர்,
8.ஷ்ரேயாஸ் ஐயர்,
9.ஷாய் ஹோப்,
10.இப்ராஹிம் ஸட்ரான்.

இதேவேளை, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம் பங்கேற்கும் முத்தரப்பு இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரின் தமது முதல் மூன்று போட்டிகளிலும் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஆப்கானிஸ்தானின் மொஹமட் நபி, சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி இரண்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை,
1.ஹர்திக் பாண்டியா,
2.மொஹமட் நபி,
3.டிபேந்திர சிங் ஐரீ,
4.றொஸ்டன் சேஸ்,
5.லியம் லிவிங்ஸ்டன்

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜேக்கப் டவ்பி, 2.அடில் ரஷீட்,
3.அகீல் ஹொஸைன்,
4.வருண் சக்கரவர்த்தி,
5.அடம் ஸாம்பா,
6.வனிது ஹசரங்க,
7.ரவி பிஷ்னோய்,
8.ரஷீட் கான்,
9.நாதன் எலிஸ், 10.அர்ஷ்டீப் சிங்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை,
1.அபிஷேக் ஷர்மா, 2.திலக் வர்மா,
3.பில் ஸோல்ட், 4.ஜொஸ் பட்லர்,
5.ட்ரெவிஸ் ஹெட்,
6.சூரியகுமார் யாதவ்,
7.பதும் நிஸங்க, 8.டிம் செய்ஃபேர்ட், 9. டிம் டேவிட்,
10.யஷஸ்வி ஜைஸ்வால்.

ஐ. அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர்:

## வெளியேற்றப்பட்ட ஸ்வியாடெக்




ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான இகா ஸ்வியாடெக் வெளியேற்றப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை (04) அதிகாலை நடைபெற்ற தனது காலிறுதிப் போட்டியில் ஒன்பதாம் நிலை வீராங்கனையான அமன்டா அனிசிமோவாவை எதிர்கொண்ட போலந்தின் ஸ்வியாடெக், 4-6, 3-6 என்ம்ற நேர் செட்களில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து வெளியேறினார்.

இதேவேளை தனது காலிறுதிப் போட்டியில் கனடாவின் பீலிக்ஸ் ஒஜே அலிஸ்மேயை எதிர்கொண்ட எட்டாம் நிலை வீரரான அலெக்ஸ் டெ மினோர், 6-4, 6-7 (7-9), 5-7, 6-7 (4-7) என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

நைஜர்

# படகு மூழ்கியதில் 60 பேர் உயிரிழப்பு

வடக்கு மத்திய நைஜீரியாவில் 80 பேரை ஏற்றிச் சென்ற படகு மூழ்கியதில் 60 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



நைஜீரியாவில், குறிப்பாக மழைக் காலங்களில் படகு விபத்துக்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

ஆனாலும், அந்த நாட்டு மக்களுக்கு படகு போக்குவரத்து தான் முக்கியத்துவமாக வாய்ந்ததாக இருக்கிறது.

நைஜீரியாவின் வட-மத்திய நைஜர் மாநிலத்தில் பயணிகள் 80 பேரை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 60 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 15க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மலாலே மாவட்டத்தில் உள்ள துங்கன் சுலேவிலிருந்து துக்காவுக்கு துக்க நிகழ்ச்சிக்கு சென்றபோது விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் பத்து பேர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் இன்னும் தேடப்பட்டு வருகின்றனர்.

படகு அதிக சுமையுடன் இருந்ததால், மரத்தின் அடிப்பகுதியில் மோதியதால் படகு கவிழ்ந்ததின் விபத்திற்கான காரணம் என்பது விசாரணையில் தெரியவந்தது.

லிஸ்பன்

## ‘கேபிள் கார்’ தடம் புரண்டதில் 15 பேர் பலி



ஐரோப்பிய நாடான போர்த்துக்கல்லின் தலைநகர் லிஸ்பனில் குளோரியா புனிகுலர் கேபிள் கார் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 18 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த விபத்தில் 5 பேர் நிலைமை மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

மேடான தண்டவாளப் பகுதியில் கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, கேபிள் கார் கட்டடம் ஒன்றின் மீது மோதியததாகச் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்துள்ளார். அந்த கேபிள் காரில் சுமார் 40 பேர் பயணம் செய்ய முடியும் என்று கூறப்படுகிறது.

கேபிள் கார் செலுத்தும் கம்பி (cable) வலுவிழந்து போனதால் விபத்து நிகழ்ந்ததாக லிஸ்பன் தீயணைப்பாளர்கள் கூறியுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களில் காரில் இருந்தவர்கள், அருகிலிருந்த பாதசாரிகள் ஆகியோர் அடங்குவர் என்றும் நியூயோர்க் டைம்ஸ் குறிப்பிட்டுள்ளது.

1885ஆம் ஆண்டு திறக்கப்பட்ட சம்பந்தப்பட்ட ‘ஃபனிக்கியூலர்’ கேபிள் கார், லிஸ்பனின் மத்தியப் பகுதியையும் பைரோ அல்டோ (Bairro Alto) பகுதியையும் இணைக்கிறது.

பழுதுபார்ப்புப் பணிகள் தொடர்பான எல்லா விதிமுறைகளையும் தாங்கள் பின்பற்றிச் செயல்பட்டதாக லிஸ்பன் பொதுப் போக்குவரத்து நிறுவனமான கேரிஸ் தெரிவித்துள்ளது. இந்த விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து போர்த்துக்கல் அரசு தேசிய துக்க தினத்தை அறிவித்துள்ளது.

லக்னோ

‘மெட்டா’வின் ‘அலெர்ட்’டால்

## உயிர் தப்பிய திக் திக் நிமிடங்கள்




உத்தரப் பிரதேசத்தில் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற கல்லூரி மாணவி, மெட்டா நிறுவனத்தின் ‘அலர்ட்’டால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

உத்தரப் பிரதேசம் மாநிலம் பரேலியை சேர்ந்த கல்லூரி மாணவி, இளைஞர் ஒருவரை இன்ஸ்டாகிராமில் காதலித்து வந்துள்ளார்.

இந்த நிலையில், அந்த இளைஞர் திடீரென தொடர்பைத் துண்டித்துள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த அந்த மாணவி, பூச்சிக் கொல்லி மருந்தையும், தற்கொலை குறிப்பையும் இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

மாணவியின் தற்கொலை குறிப்பு குறித்து உள்ளூர் பொலிஸ் நிலையத்துக்கு மெட்டா நிறுவனம் ‘அலர்ட்’ செய்துள்ளது.

மெட்டா நிறுவனம் ‘அலர்ட்’ செய்ததன்பேரில், பொலிஸார் 16 நிமிடத்தில் அந்த மாணவியின் இருப்பிடத்திற்கு சென்று, பூச்சி மருந்து குடித்த நிலையில், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த மாணவியை மீட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

இதனால் தற்போது மாணவி உடல்நிலை சீராக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

“பேஸ்புக்“ மற்றும் ‘இன்ஸ்டாகிராமில்’ தற்கொலை தொடர்பான பதிவு செய்யப்பட்டால் அது குறித்த ‘அலர்’ட்டை பெறுவதற்காக 2022 முதல் மெட்டாவுடன் உத்தரப் பிரதேச பொலிஸார் ஒரு ஏற்பாட்டை கொண்டுள்ளது. இந்த ஏற்பாட்டால் ஜனவரி 2023 முதல் மாநிலத்தில் 1,315 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர் என பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்தூர்

அவசர சிகிச்சை பிரிவில் இருந்த

## குழந்தைகள் எலி கடித்து பலி




மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ள மிக பெரிய அரச மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பிறந்து சில நாட்களேயான 2 குழந்தைகளை எலிகள் கடித்து குதறியதில் இறந்துள்ள சம்பவம் ஒன்று வியாழக்கிழமை (03) அன்று இடம்பெற்றுள்ளது.

இதுபற்றிய வீடியோ ஒன்றும் வெளிவந்து வைரலானது. இதனால் பெரும் சர்ச்சை வெடித்தது. இதுபற்றி அந்த மருத்துவமனையிலுள்ள டாக்டர் அசோக் யாதவ் கூறும்போது, தீவிர சிகிச்சை பிரிவில் உள்ள குழந்தை ஒன்றின் விரல்களையும், மற்றொரு குழந்தையின் தலை மற்றும் தோள் பகுதியையும் எலிகள் கடித்து உள்ளன. அவை இரண்டும் பிறந்து சில நாட்களேயான குழந்தைகள் ஆகும். அவற்றில் ஒரு குழந்தை கார்கோன் மாவட்டத்தில் யாருமற்ற நிலையில் கைவிடப்பட்டு கிடந்துள்ளது. அதனை மீட்டு சிகிச்சைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அத்துடன், இந்த சம்பவங்கள் பற்றி விசாரிக்க குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 24 மணிநேரமும் தீவிர கண்காணிப்புடன் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது என அவர் கூறினார்.

இந்த சம்பவத்தில், பணியாளர்கள் 2 பேரை மருத்துவமனை நிர்வாகம் பணி நீக்கம் செய்துள்ளது. பல்வேறு அதிகாரிகளுக்கும் விளக்கம் கேட்டு மனு அனுப்பியுள்ளது.

அரசு மருத்துவமனை ஐ.சி.யு.வில் சிகிச்சை பெற்று வந்தபோது, எலி கடித்த 2 குழந்தைகளும் பலியான சம்பவம் பெருத்த சோகம் ஏற்படுத்தி உள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 05, செப்டெம்பர் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.